# கல்வி அமைச்சு

# தேசிய கல்வியியல் கல்லூரியை தாபித்தல்

# பதவி வெற்றிடம் (ஒப்பந்த அடிப்படையில்)

நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 1/2019 ஆம் இலக்க 2019.03.15ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம், பின்வரும் பதவிகளுக்கான தகைமையும் சுறுசுறுப்புமுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. கனிய அளவையியலாளர்
## (Q.S.) (PS 4 - வகுதி A) - 01 பதவி வெற்றிடம்

**தகைமைகள்: (கீழேயுள்ள i அல்லது ii அல்லது iii இற்கானது)**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கனிய அளவையியலில் பெற்ற பட்டமொன்று.

**அல்லது**

கனிய அளவையியல் பட்டத்திற்கு நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று

**அல்லது**

கனிய அளவையியலில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரான தொழில்சார் தகைமையொன்று.

**அல்லது**

கனிய அளவையிடலுக்கு இசைவான துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய திறன் தரநிலை 7 (NVQ-7) இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கனிய அளவையியலில் ஆகக் குறைந்தது 5 வருட கால பட்டத்திற்கு பின்னரான சேவை அனுபவம்.

ii. தொழில்நுட்ப துறைக்கு இசைவான துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய திறன் தரநிலை 6 (NVQ-6) இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கனிய அளவையியலில் ஆகக் குறைந்தது 11 வருட கால பட்டத்திற்குப் பின்னரான சேவை அனுபவம்.

iii. தொழில்நுட்ப துறைக்கு இசைவான துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய திறன் தரநிலை 5 (NVQ-5) இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கனிய அளவையியலில் ஆகக் குறைந்தது 16 வருட கால பட்டத்திற்குப் பின்னரான சேவை அனுபவம்.

**சம்பளம் :** மட்டம் PS 4 - ரூபா. 90,000/=

**மேலேயுள்ள பதவிகளுக்காக தேவைப்படும் திறன்கள்:**

i. அதிசிறந்த சமூகரீதியான தொடர்பாடல் (வாய்மூலம் மற்றும் எழுத்து மூலமானது) மற்றும் அறிக்கைகளை ஆங்கிலத்தில் எழுதும் ஆற்றல்.

ii. AutoCAD மற்றும் MS செயற்றிட்டம் அல்லது நிகரானவற்றிலுள்ள திறன்.

iii. MS Office package இல் முழுமையான அறிவுடன் கூடிய கணினி புலமை.

iv. சுதந்திரமாகவும் குழுவாகவும் பணியாற்றும் ஆற்றல் மற்றும் பல்வேறுபட்ட கடமைகளை முகாமைத்துவம் செய்யும் திறன்.

வெளிநாட்டு நிதி உதவியினாலான செயற்றிட்டங்களில் சேவையாற்றிய அனுபவம், கட்டட நிர்மாண ஒப்பந்தங்களை ஆள்வதற்கான நியதிகள், நிபந்தனைகள் மற்றும் சட்டங்களை உரிய வகையில் விளங்கிக்கொள்ளும் திறன்கள் மற்றும் ஆங்கிலத்தில் அறிக்கைகளை தயாரிக்கும் ஆற்றல் என்பன விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

**வேலைவாய்ப்பு நியதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

ஆட்சேர்ப்பு முறைமையானது முழு நேர ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு அமைவதுடன் திருப்திகரமான செயற்பாட்டிற்கு உட்பட்டதாக வருடந்தோறும் புதுப்பிக்கப்படக்கூடியது. சேவை நிலையமானது ''இசுருபாய'' அல்லது நாரங்களவிலுள்ள வேலைத்தளமாக அமையும்.

**விண்ணப்பங்கள்:**

விண்ணப்பதாரர் தொடர்பான சுயவிபரப் படிவம் (CV), கல்விசார், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் என்பவற்றோடு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்கள் (கையடக்கத்தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி) ஆகியன அடங்கிய வகையிலான விண்ணப்பப்படிவம் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு 2023 ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரியை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

அரசாங்க/ அரச சார் துறையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பங்களை திணைக்களங்களின் தலைவர்களூடாகவே அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**மேலதிக செயலாளர் (பொறியியல்)/ செயற்றிட்ட பணிப்பாளர்,**
**கல்வி அமைச்சு,**
**தரை மாடி, ''இசுருபாய'',**
**பத்தரமுல்ல.**